**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி.P. கனிமொழி , B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
2025 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06 ம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056, குரோதி வருடம் தை மாதம் 24 ம் நாள்
**இ.ம.எண். 2/2024**
**இல்**
**அசல் வழக்கு எண். 86/2023**

பஷிர் அகமது ..மனுதாரர் / வாதி

//எதிர்//

நிஜாம் என்கிற நிஜாமுதீன்

..எதிர்மனுதாரர்/ பிரதிவாதி

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 06.02.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P. ஸ்ரீதரன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. M.K. பாலமுருகன், அவர்கள் ஆஜராகியும் வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்த பிறகு நன்கு பரிசீலித்தபின் இன்று இந்நீதிமன்றம் (06.02.2025) கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து ஏற்றுக்கொண்டு வழக்கை மேல் நடத்த உத்தரவு பிறப்பிக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்:**

2. இந்த மனுவின் மனுதாரர் மற்றும் அசல் வழக்கில் வாதி ஆவார். இவ்வழக்கில் தான் தாக்கல் செய்துள்ள இடைக்கால மனுக்கள் இன்று 1.7.2024 அன்று விசாரணைக்கு போடப்பட்டுள்ளது. தான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதாகவும், அவ்வாறு தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரை தான் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு அடமான பத்திரம் எழுதி கொடுத்ததாகவும், அதன் பின் தொடர்ச்சியாக அந்த ஆவணத்தின ஜெராக்ஸ் நகலை தரவேண்டியும், இதுநாள் வரை தனக்கு அடமான ஆவணத்தின் நகலை தரவில்லை என்றும், ஆகவே, 1. கடந்த 22.11.2023 அன்று பிரதிவாதிக்கு

ரெவின்யூ துறை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் பெறப்பட்டதற்கான ஒப்புதல் அஞ்சல் அட்டை, 2. கடந்த 8.1.2024 அன்று தான் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு, அது பெறப்பட்டதற்கான ஒப்புதல் அஞ்சல் அட்டை, 3. கடந்த 8.1.2024 அன்று வட்டாட்சியர் சரவணன் மற்றும் ரெவின்யூ துறை உயர் அதிகாரிகள், பிரதிவாதிக்கு அனுப்பியுள்ள வழக்கறிஞர் அறிவிப்பு, அது பெறப்பட்டதற்கான ஒப்புதல் அஞ்சல் அட்டை, 4. கடந்த 8.1.2024 தொடர்பாக, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டி வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அரசு சார்பு செயலாளர் கடித எண் 2301/பொது – III(1)/2024–1 நாள் 27.02.2024 மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மயிலாடுதுறைக்கு உரிய நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ள ஆவணங்கள், 5. தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் என்னால் அனுப்பப்பட்ட மனு மற்றும் அதற்கு வட்டாட்சியர் அலுவலகம் தந்துள்ள பதில் உள்ளிட்டவைகளை இவ்வழக்கிலும், இடைக்கால மனுக்களிலும் கூடுதல் ஆவணங்களாக தன் தரப்பில் தாக்கல் செய்ய அனுமதிக்க வேண்டுவது அவசியமும் நியாயமுமென உறுதி கூறி மேற்கண்ட ஆவணங்கள் வழக்கு தாக்கல் செய்ததை பின் தொடர்ச்சியாக எதிர்மனுதாரர்/பிரதிவாதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்த எதிர்வழக்குரையின் அடிப்படையிலும் சங்கதிகள் தெரியவந்ததால், வேறுவழியின்றி உண்மைநிலையை அறியும் பொருட்டு தன்னால் அனுப்பப்பட்ட அறிவிப்புகள் மற்றும் மனுக்கள் என்றும், எனவே, வழக்கு தாக்கல் செய்த காலத்தில் தன்னால் மேற்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், எனவே மேற்கண்ட ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாமல் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து இத்துடன் தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்று உத்தரவு கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

<u>**எதிருரையின் சுருக்கம்:**</u>

3. மனு சட்டப்படியும், சங்கதிகள்படியும் ஏற்புடையதல்ல. மனுதாரர் அபிடவிட்டில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மையல்ல என்றும், அதனை இந்த எதிர்மனுதாரர் மறுக்கின்றார் என்றும், எனவே மனுதாரர் அபிடவிட்டில் சொல்லி உள்ளவைகளை நிருபிக்க கடமைப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் இம்மனுவை காலம் கடந்து தாக்கல் செய்துள்ளதாகவும், அதன் அடிப்படையில் இம்மனு தள்ளுபடி

செய்ய வேண்டும் என்றும், மனுதாரர் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் இந்த வழக்கிற்காக தற்பொழுது வருவாய்த்துறை அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டு அதனை தாக்கல் செய்துள்ளார் என்றும், அதன் காரணமாக இந்த ஆவணங்களை ஏற்கக் கூடியதில்லை என்றும், தாவா சொத்துக்கள் அனைத்தும் இந்த எதிர்மனுதாரர்/ பிரதிவாதி வசத்திலும் அனுபவத்திலும், சுவாதினத்திலும் உள்ளது என்றும், தாவா சொத்துக்களை வாதி தொடர்ந்து சாகுபடி செய்து வருகிறார் என்றும், ஆகையால் சமூகம் நீதிமன்றத்தார் அவர்கள் தயவுசெய்து மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கூறியுள்ளனர்.

4. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சினை இந்த மனுவை அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்.

**தீர்வு:**

5. மனுதாரர் தரப்பில், மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், எதிர்மனுதாரர் அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் தாவா 5வது அயிட்ட சொத்தைப் பொறுத்து 2018 ஆம் ஆண்டு எதிர்மனுதாரர் வசம் அடமான பத்திரம் ஏற்படுத்தி கொடுத்ததாக பொய்யான விவரத்தினை தெரிவித்துள்ளார் என்றும், அந்த ஆவணத்தின் நகலை தர கோரி 08.01.2024 அன்று மனுதாரர் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பியதாகவும், அந்த அறிவிப்பு பெற்று கொண்ட எதிர்மனுதாரர் அடமான ஆவணத்தின் நகலை கொடுக்கவில்லை என்றும், வழக்கு தாக்கல் செய்த பிறகு பிரதிவாதிக்கு வருவாய்துறையினர் அடங்கல் ஆவணங்களை கொடுத்துள்ளார்கள் என்றும், வழக்கு தாக்கல் செய்த விவரங்களை நன்கு அறிந்தே பிரதிவாதியின் செல்வாக்கிற்கு கட்டுப்பட்டு வருவாய் துறையினர் முன்தேதியிட்டு கொடுத்துள்ளார்கள் என்றும், இது குறித்து மனுதாரர் வருவாய் துறை அலுவலர்களுக்கு அறிவிப்பு அனுப்பியதாகவும், அந்த அறிவிப்பை பெற்று கொண்டு பதில் எதுவும் கொடுக்கவில்லை என்றும், அதனால் மனுதாரரால் அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு, அஞ்சல் இரசீதுகள் மற்றும் ஒப்புதல் அஞ்சல் அட்டைகள் தகவல் அறியும்

உரிமை சட்டத்தின் கீழ் அனுப்பபட்ட மனு மற்றும் இதர ஆவணங்கள் அசல் வழக்கிலும் இடைக்கால மனுக்களிலும் தாக்கல் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், அவைகள் மேற்படி வழக்கையும், இடைக்கால மனுவையும் தீர்மானிக்க முக்கியமான ஆவணங்கள் என்பதால் , மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொள்ள கோரி கூறப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர்கள் தரப்பில், மனுதாரர்கள் மனுதாரர் இந்த மனுவை காலம்கடந்து தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் இந்த வழக்கிற்காக தற்போது வருவாய் துறை அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டு அதனை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே, இந்த மனு தள்ளுபடி செய்ய வேண்டியது என்றும் கூறப்பட்டுள்ளது.

7. மனுதாரர் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி எதிர்மனுதாரருக்கு எதிராக இந்த அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். வழக்கு நிலுவையில் உள்ள போதே வழக்கு பற்றிய விவரங்களை நன்கு தெரிந்திருந்தும் வருவாய் துறையினர் பிரதிவாதிக்கு முன்தேதியிட்டு அடங்கல் ஆவணத்தை கொடுத்து உள்ளதாகவும், இது குறித்து மனுதாரர் வருவாய் துறையினருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், அந்த அறிவிப்பை பெற்று கொண்ட வருவாய் துறையினர் பதில் அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை என்றும், எனவே மேற்படி வருவாய் துறையினருக்கு அனுப்பிய அறிவிப்புகளையும், ஒப்புதல் அட்டையையும் தாக்கல் செய்ய வேண்டியது அவசியமாகிறது என கூறப்பட்டுள்ளது. மனுதாரர் கூறியுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ள கூடியதாக உள்ளது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும், மேற்படி ஆவணங்கள் இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணங்கள்தான். அவைகளை பொறுத்து ஆட்சேபனை எதுவும் இருக்கும் பட்சத்தில் இந்த எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்யும்பொழுது ஆட்சேனையை தக்கமுறையில் பதிவு செய்யலாம். இந்த ஆவணங்கள் நீதிமன்றத்தில் பெறப்பட்டு குறியீடு செய்யப்பட்டது என்பதாலேயே அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டதாக தீர்மானம் செய்ய இயலாது. அந்த ஆவணத்தின் உண்மை தன்மை குறித்து உரிய நேரத்தில் தீர்வு காணப்படும். மேற்படி ஆவணங்களை குறியீடு செய்வதால் இந்த எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பிரச்சனையோ கஷ்ட நஷ்டமோ

ஏற்படாது. மாறாக, அசல் வழக்கில் ஒரு முழுமையான தீர்வு ஏற்பட உதவிகரமாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுவதால் இந்த மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

8. **முடிவாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது, செலவுத்தொகையில்லை**.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் இன்று சரிபார்க்கப்பட்டு, பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 06.02.2025 இல் திறந்த நீதிமன்றத்தில் அவை அறியப் பகரப்படுகின்றது.

(ஒப்பம்) P. கனிமொழி,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**தரங்கம்பாடி.**

**இணைப்பு:**

மனுதாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் : இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் :இல்லை

(ஒப்பம்) P. கனிமொழி,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**தரங்கம்பாடி.**